திருநெல்வேலி மாவட்டத்தில் மொத்தமுள்ள 225 கிராம ஊராட்சியில் 62 குவாரிகள் இருப்பதாகவும் ஆனால் இருக்கன்துறை ஊராட்சியில் மட்டுமே 32 கல் குவாரிகள் அதாவது 60 % குவாரிகள் இருக்கன்துறை ஊராட்சியில் காணப்படுவதாக கூறினார். இதனால் இருக்கன்துறை ஊராட்சிக்கு உட்பட்ட ஆழ்துளை கிணறுகளில் தண்ணீர் இல்லை எனவும், இருக்கன்துறை ஊராட்சிக்கு உட்பட்ட நீர்வளத்துறைக்கு சொந்தமான 13 குளங்கள் உள்ளன. ஆனால், இராதாபுரம் கால்வாயில் தண்ணீர் விடுவதில்லை எனவும், ஆண்டுக்கு சுமார் 40 பேர் கனரக வாகன விபத்துகளில் பாதிப்படைவதாகவும், கடந்த 2 மாதம் முன் இருக்கன்துறை ஊராட்சிக்கு உட்பட்ட கல்குவாரியில் ஒரு தொழிலாளி இறந்ததாகவும் அதற்கு கல்குவாரி உரிமையாளர் வெறும் ரூ.25,000/- மட்டும் நிவாரணம் அளித்ததாகவும், வேற எந்த வித நிதியும் கொடுக்கவில்லை எனவும், 19 நபர்களுக்கு மேல் வேலை செய்தால் தொழிலாளர் ஆணையச் சட்டத்தின் படி உரிமம் பெற வேண்டும் ESI கட்ட வேண்டும், குறைந்த பட்ச ஊதியம் நடைமுறைப்படுத்த வேண்டும், ஆனால், இருக்கன்துறை ஊராட்சியில் உள்ள தொழில் நிறுவனங்கள் இதை கடைபிடிக்கவில்லை. இங்கு எந்த குவாரியாவது இறந்தவர்களுக்கு Workman Compensation Act –ன் படி இழப்பீடு வழங்கியது உண்டா என கேள்வி எழுப்பினார்.

கடந்த 2 மாதம் முன் இருக்கன்துறை ஊராட்சியில் கல்குவாரிகள் வரக்கூடாது தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும், இருக்கன்துறை ஊராட்சியில் கல்குவாரி அமையுமானல் அதே ஊராட்சியில் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்துவதாக மாசு கட்டுப்பாடு வாரியம் தகவல் வழங்கியதாக கூறினார். இன்று நடைபெறுகின்ற கருத்து கேட்பு கூட்டம் குறித்த கிராம நிர்வாக அலுவலர் அவர்களிடம் கேட்ட போது அவர் தெரியாது எனவும், வட்டாட்சியரிடம் கேட்ட போது நாளை கருத்துக்கேட்பு கூட்டம் நடைபெறும் என கூறியதாகவும் தெரிவித்தார்.

மாவட்ட வருவாய் துறை, ஊராட்சி துறை, நீர்வளத்துறை, மாசு கட்டுப்பாடு வாரியம் ஆகியவை கல் குவாரி உரிமையாளர்களுக்கு உறுதுணையாக

செயல்படுவதாகவும், அரசு விதிமுறைகளின் படி செயல்படவில்லை எனவும் கூறினார். சார் ஆட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்து இராதாபுரம் வட்டத்தை வறட்சியான இடமாக அறிவிக்கக்கேட்டால், நன்றாக இருப்பதாக கூறினார்கள் என்றார். பின், ஒரு ஊராட்சிக்கு எத்தனை குவாரிகள் அமைக்கலாம் என கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து பேசிய அவர் இருக்கன்துறை கிராமத்தில் குவாரிகள் அமைத்து விட்டு இங்கு இருக்கும் மக்களை நான்குநேரி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் அடுக்குமாடி குடியிருப்பு அமைத்து குடியேற வைக்கலாம் என கூறினார். காலை 7 மணி முதல் 9 மணி வரை பள்ளி வாகனங்கள் வருவதாகவும், அந்த நேரத்தில் கனரக வாகனங்களும் அதிக வேகமாக வருவதால் கனரக வாகனங்கள் செல்லும் நேரத்தை மாற்றம் செய்ய மனு அளித்தால் அதற்கு விதிமுறைகள் இல்லை என கூறுவதாகவும், இராதாபுரம் வட்டத்தில் வேறு எந்த ஊராட்சிகளிலும் கல் குவாரிகள் அதிகமாக இல்லை எனவும் கூறினார்.

மக்கள் பூ பறிக்கும் தொழில் செய்து தான் வாழ்கின்றனர், அவர்களுக்கு வாழ்வாதாரம் ஏதும் இல்லை எனவும், கடந்த மாதம் நடத்த கூட்டத்தில் இராதாபுரம் கால்வாய்க்கு உட்பட்ட குளங்களை பார்வையிட சார் ஆட்சியர் வருவதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்தாகவும், ஆனால் இதுவரையிலும் வரவில்லை என கூறினார்.

மனிதாபிமான முறையில் இருக்கன்துறை ஊராட்சிக்கு உட்பட்ட விவசாயிகளின் நலன் கருதி இனி வரும் காலங்களில் கல் குவாரிகள் மற்றும் கிரஷர்கள் அமைக்க கூடாது என எதிர்ப்பு தெரிவிக்கிறோம் என கூறினார். மீண்டும் இது போன்று வந்தால் விவசாயிகளுடன் இணைந்து தமிழ்நாடு விவசாய சங்கம், இராதாபுரம் அளவிலான விவசாயிகள் மற்றும் அனைத்து கட்சிகளுடன் இணைந்து மாபெரும் போராட்டம் சார் ஆட்சியர் அலுவலகம் முன் நடத்துவோம் எனக் கூறினார்.

<u>திரு.சாக்ரடீஸ் ஜெயபாண்டி, கூடன்குளம் :-</u>

திரு. சாக்ரடீஸ் ஜெயபாண்டி அவர்கள் பேசுகையில் இருக்கன்துறையில் அமையவிருக்கும் கல் குவாரியினால் ஏழை மக்களுக்கு படிக்காத மக்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாத மக்களுக்கு பலன் கிடைக்கப்போவதாக கூறினார். இருக்கன்துறையில் பணக்காரர்கள் வாழ்கிறார்கள் அவர்கள் குழந்தைகள் கல்லூரியில் பயில்கிறார்கள். அவர் பேசுகையில் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

தொடர்ந்து பேசிய அவர் கூறுகையில் ஏழை மக்கள் பண உதவி கேட்டால் கொடுக்கமாட்டார்கள். அந்த இடத்தில் ஒரு தொழிற்சாலை வருவதால் ஏழை மக்களுக்கு, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற காரணத்தினால் எங்களுக்கு இந்த கல் குவாரியானது இருக்கன்துறை கிராமத்தில் வேண்டும். எத்தனை கல்குவாரிகள் இங்கு இருந்தாலும் இந்த கல் குவாரியும் எங்களுக்கு வேண்டும் என கூறினார்.

நாங்கள் வேலைவாய்ப்பை எதிர்பாத்து கொண்டு இருக்கிறோம் என கூறிய அவர், ஒரு காலத்தில் நாம் வீடு கட்ட மணல், மலை உடைத்து கட்டிக்கொண்டிருந்தோம், அதன் பிறகு பூமியில் நிலக்கரியை கண்டுபிடித்தோம், மின்சாரம் தயாரித்தோம், அணுவை கண்டுபிடித்தோம், மின்சாரம் தயாரித்தோம், அதன் பிறகு பெட்ரோலை கண்டுபிடித்தோம், தற்போது கல்குவாரியை கண்டுபிடித்து வீடு கட்டிக் கொண்டிருக்கிறோம். மனித வளர்ச்சிக்கு முதலில் தேவை வீடு, இரண்டாவதாக உணவு இவ்வாறான அடிப்படை உரிமைகளை அளிப்பது அரசின் கடமை. கல் குவாரிக்கு அனுமதி அளிக்கவில்லை என்றால் அரசிடம் முறையீடுவேன் என கூறினார்.

இருக்கன்துறையில் அமையவுள்ள கல் குவாரிக்கு அனுமதி கொடுத்தால் அவர்கள் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொண்டு குவாரியை நடத்துவார்கள். இதனால் இந்திய பொருளாதாரம் வளர்ச்சி அடையும் எனவும், ஏழை மக்கள் மற்றும் படிக்காத மக்கள் முன்னேற வாய்ப்புள்ளதாகவும் கூறினார்.

**திரு.கல்யாணிகுமார், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி :-**

திரு.கல்யாணிகுமார், அவர்கள் பேசுகையில் எனக்கு முன்னால் பேசியவர் இந்த கல் குவாரி வந்தால் இங்கு பெரிய தொழிற்சாலைகள் உருவாகும், நிறைய பேருக்கு வேலை வாய்ப்புகள் பெருகும் என கூறியதாகவும், மேலும் முதலில் பேசிய ரஜினி அவர்கள் 63 கல் குவாரிகளில் இருக்கன்துறை ஊராட்சியில் மட்டும் 32 கல்குவாரிகள் உள்ளதாக தெரிவித்ததாகவும் கூறினார்.

திட்ட அறிக்கையில் 4 லாரிகள் மற்றும் 3 துளையிடும் இயந்திரங்கள் மட்டுமே பயன்படுத்தப்படும் என விளக்கியதாகவும், மக்களும் இதனை நம்புவதாகவும் கூறினார். ஆனால் ஒரு குவாரியில் மட்டும் ஒரு நாளைக்கு இங்கு 400 லாரிகள் இயங்கி கொண்டிருக்கிறது. சார் ஆட்சியர் அவர்களுக்கும், வட்டாட்சியர் அவர்களுக்கும் தெரியும் 20 குவாரிகள் இங்கு இயங்கினால் ஒரு நாளைக்கு 1200 லோடு கற்கள் கேரளா மாநிலத்திற்கு கடத்தப்படுகிறது. ஆரல்வாய்மொழியில் ஆய்வு செய்து பார்த்தால் இங்கு உள்ள கனிம வளங்கள் கொள்ளையடித்துக் கொண்டு செல்லப்படுவதை காணலாம் என்று கூறினார்.

மேலும், அவர் கூறுகையில் தனக்கு முன்னால் பேசியவர் இங்கு தொழிற்சாலை வந்துவிடும், பல லட்ச நபருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் எனவும் தெரிவித்ததாகவும், ஆனால், இருக்கன்துறை மட்டுமல்லாமல் இராதாபுரம் தொகுதிக்கு உட்பட்ட மூன்று பேரூராட்சிகள் தவிர அனைத்து ஊராட்சிகளிலும் கல்குவாரிகள் இருப்பதாகவும், இராதாபுரம் தொகுதியில் 5 லட்சம் மக்கள் வசிப்பதாகவும் ஆனால் எத்தனை லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது எனவும் கேள்வி எழுப்பினார். மாசு கட்டுப்பாடு முறைகளால் தூசி பறக்காது என விளக்கினார்கள். ஆனால் இங்குள்ள அதிகாரிகள் சங்கநேரி விலக்கு பகுதிக்கு சென்று பார்த்தால் அங்கு ஏற்பட்டுள்ள சுற்றுச்சூழல் பாதிப்பை காணலாம். அங்கு மனிதர்கள் வசிக்க முடியாது எனவும் கூறினார். நாங்கள் பல கட்ட போராட்டம் நடத்துவதாகவும், இங்கு இருக்க கூடிய மக்கள் கல் குவாரி வந்தால் எந்த பாதிப்பும் ஏற்படாது என நினைப்பதாகவும், ஆனால் 3000 ஏக்கர் வரை நிலத்தடி நீர் பாதிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

வேப்பிலான்குளம் ஊராட்சி முதல் அனைத்து ஊராட்சிகளிலும் கல் குவாரி உள்ளது. விவசாயம் பாதிப்படைவது மட்டுமல்லாமல் கோழி வளர்ப்பு ஆடு மற்றும் மாடு வளர்ப்பும் பாதிக்கப்படும், நிலத்தடி நீரும் பாதிக்கப்படும். திட்ட விளக்கத்தில் கல் குவாரி திட்டம் முடிவடைந்தவுடன் அதனை நீர் நிலைகளாக பயன்படுத்துவோம் என்று கூறியதாகவும், ஆனால் எந்த கல் குவாரிகளாவது இவ்வாறு செய்துள்ளதா என கேள்வி எழுப்பினார். கல் குவாரிகளினால் கனிம வளம் மற்றும் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 35 மாவட்டங்கள் உள்ளதாகவும், ஆனால் இருக்கன்துறை பகுதியில் மட்டும் அதிக எண்ணிக்கையில் கல்குவாரிகளுக்கு அனுமதி வழங்குவதாகவும் இதனால் சுற்றுச்சூழல் பாதிப்படையவில்லையா எனவும் கேள்வியெழுப்பினார். இதற்கு முன்னால் இருக்கன்துறை ஊராட்சியில் அமைந்துள்ள எலும்பு ஆலை மற்றும் மீன் அரவை ஆலைகளால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதாக மிகப் பெரிய போராட்டம் நடத்தப்பட்டதாகவும், 20,000 நபருக்கு மேல் வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய கூடன்குளம் அணு உலை உள்ளதாகவும் அதனால் அங்கு மீண்டும் கல் குவாரி துவங்குவது சரியாக இருக்காது. இதனால் இராதாபுரம் பகுதி பாலைவனமாக மாறுவதற்கு வழிவகுப்பதாக கூறினார். இன்னும் 2 மாதங்களுக்கு மழை இல்லை என்றால் குடிநீர் முதல் விவசாயம் வரை பாதிக்கப்படும்.

ஆகையால், இந்த கல் குவாரிக்கு அனுமதி அளிக்ககூடாது மேலும், ஏற்கனவே உள்ள கல்குவாரிகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூறினார். மேலும் திட்ட அறிக்கையில் 100 அடி ஆழம் வரை மட்டுமே கல் வெட்டி எடுக்கப்படும் என குறிப்பிட்டுள்ளதாகவும், ஆனால் காவல்கிணறு பகுதியில் அமைந்துள்ள ஒரு கல் குவாரி அதிக ஆழத்தில் கல் வெட்டி எடுக்கப்பட்டதாகவும்

கூறிய அவர், தற்போது அமையவுள்ள குவாரிக்கும் மற்றும் ஏற்கெனவே அமைந்துள்ள கல் குவாரிகளுக்கும் அனுமதி அளிக்கக்கூடாது. சிதம்பராபுரம் மற்றும் இருக்கன்துறை ஊராட்சிகளில் கல் குவாரிகளுக்கு அனுமதி வழங்ககூடாது என தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

**திரு. நித்தியானந்த், கூடன்குளம்:–**

திரு. நித்தியானந்த் அவர்கள் பேசுகையில், தான் இதுவரை நிறைய கருத்துக்கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளதாகவும் இதுவரை சாமானிய மக்களின் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை எனவும், அவர் ஒவ்வொரு கருத்துக்கேட்பு கூட்டத்திலும் தங்களது கருத்துக்களை கூறிக் கொண்டுள்ளதாகவும் ஆனால் மத்திய மற்றும் மாநில அரசு யாரும் அதை கேட்பதாக இல்லை எனவும், இருக்கன்துறை பகுதி –II கிராமத்தில் 20 குவாரிகள் உள்ளதாகவும், ஆனால் எந்த ஒரு குவாரி உரிமையாளர்களும் ஒரு மரம் கூட நடுவதில்லை, ஏதாவது தன்னார்வலர்கள் தான் மரம் நடுகிறார்கள் என்றும் இது வெறும் கண்துடைப்பு தான் எனவும் கூறினார்.

மேலும், திட்ட விளக்கத்தில் குவாரி திட்டம் முடிவுற்ற பின் 60 % கழிவுகளை குழியில் நிரப்புவதாக குறிப்பிட்டார்கள் எனவும், ஆனால் இதே நிறுவனத்திற்கு சொந்தமான முடிவுற்ற கல்குவாரிகளை அரசு விதிமுறைகளை பின்பற்றி மூடியுள்ளார்களா என கேள்வி எழுப்பினார். மேலும் 4 லாரிகளை மட்டுமே பயன்படுத்தவுள்ளதாக திட்ட அறிக்கையில் குறிப்பிட்டார்கள் எனவும், இத்தனை லாரிகளை பயன்படுத்தபட வேண்டும், வெடி இவ்வளவு உபயோகபடுத்தப்பட வேண்டும் மற்றும் எப்போது வெடி வைக்கபட வேண்டும் என்று வரைமுறையுள்ளது எனவும், ஆனால் கடந்த ஞாயிற்றுகிழமை கர்நாடகா மாநிலத்தை சேர்ந்த APS என்ற பெயரில் உள்ள 50 கனரக வாகனம் சென்றதாகவும், சுதந்திர தினம் அன்று கூட கனரக வாகனம் செல்கிறது எனவும், வெறும் கண்துடைப்பிற்காக தான் இந்த கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தப்படுகிறது.

மேலும், அவர் கூறுகையில் வயதானவர் ஒருவர் பட்டாவிற்காக சார் ஆட்சியர் அலுவலகத்திற்கு சென்றால் ஆறு மாதங்களாகியும் கிடைக்கவில்லை எனவும், ஆனால் கல் குவாரி உரிமையாளர்களுக்கு உரிமம் சரியாக கிடைக்கிறது எனவும், திட்ட விளக்கத்தில் குவாரியினை சுற்றி காட்டப்பட்ட நிழற்படங்களில், அருகில் உள்ள கூடன்குளம் அணு உலை மற்றும் அணு கழிவு மையத்தை காட்டவில்லை எனவும் குறிப்பிட்டார். வான்பரப்பு தொலைவை கணக்கிட்டால் 5.3 கி.மீ தொலைவில் அணு உலை அமைந்துள்ளதாகவும் கூடன்குளம் பகுதியானது 3.7 கி.மீ தொலைவில் உள்ளதாகவும் தெரிவித்தார். கல்குவாரிகளில் வெடி வைக்கும்போது அணு உலை வெடித்தால் எப்படி பாதுகாப்பது என்று யாருக்கும் தெரியாதுஎனவும் கூறினார்.

மேலும், 18 முதல் 20 நபர்கள் வரை வேலை செய்யவுள்ளதாக திட்ட விளக்கத்தில் குறிப்பிட்டார்கள் எனவும், ஆனால் விபத்து ஏற்படும்போது வழங்கப்படும் இழப்பீடு தொகை காப்பீடு குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை எனவும், வெறும் கண்துடைப்பிற்காக தான் இந்த கருத்து கேட்பு கூட்டம் நடத்தப்படுகிறது எனவும், அரசு நினைத்தால் மறைமுகமாக குவாரிக்கு அனுமதி அளிக்கலாம் எனவும் கூறினார். இராதாபுரம் தொகுதியில், இருக்கன்துறை மற்றும் கூடன்குளம் பகுதியில் 1500 விவசாயிகள் வேலை செய்தார்கள் எனவும், ஆனால் தற்போது 300 விவசாயிகள் கூட இங்கு இல்லை எனவும், கால்வாயில் தண்ணீர் வரவில்லை என மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுப்பதற்கு அழைத்தால் 25 விவசாயிகள் கூட வருவதற்கு இல்லை எனவும், அமுதா என்கிற தண்ணீர் நிறுவனம் 10 வருடத்திற்கு முன் இராதாபுரத்தில் இயங்கிவந்ததாகவும், ஆழ்துளை கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து விற்பனை செய்ய கூடாது என நிலநீர் அமைப்பு

தடைச்செய்ததாகவும் அதனால் நிறுவனம் வேறு இடத்திற்கு இடம் மாற்றம் செய்யதாகவும் கூறினார். தன்னுடைய கிணறு 100 அடி ஆழம் உள்ளதாகவும் ஆனால் கல்குவாரியானது 252 அடி ஆழம் உள்ளதாகவும், அதனால் கடல்நீர் உட்புகுவதற்கு வாய்ப்புள்ளதாகவும், தங்கள் பகுதி நல்ல தண்ணீர் கிடைப்பதில்லை உப்பு தண்ணீர் தான் கிடைப்பதாகவும், குழாய்கள் மூலம் நல்ல தண்ணீர் எப்போதாவது தான் கிடைக்கும் எனவும், இந்த கல்குவாரி அமைவதால் கதிர்வீச்சு கலந்த கடல்நீரை தான் இனி வரும் காலங்களில் குடிக்க கிடைக்கும் என பேசிய அவர் இராதாபுரம் தாலுகாவிற்கு கல்குவாரிகள் வேண்டாம் என தனது கருத்தை பதிவு செய்தார்.

**திரு. சுந்தரலிங்கம், கூடன்குளம்:-**

திரு.சுந்தரலிங்கம், அவர்கள் பேசுகையில் தான் முன்னர் அணு உலை போராளியாக இருந்ததாகவும் அணு உலை திட்டம் வந்த போது கூடன்குளத்தில் அமைந்திருந்த RC பள்ளி கூடமே இடிக்கப்பட்டதாகவும், ஆனால் தற்போது மாசு கட்டுபாடு வாரியம் எதையும் கட்டி கொள்ளலாம் ஆனால் அணு உலைக்கு எதிரியாக இருக்காதே என்ற நிலைபாட்டில் இருப்பதாகவும் தெரிவித்தார். இருக்கன்துறை பகுதி 2 கிராமத்தில் தற்போது அமைய உள்ள கல்குவாரியானது அணு உலையிலிருந்து சுமார் 3 கிலோமீட்டர் தொலைவில் அமையவிருப்பதாகவும், ஆனால் அணு உலையிலிருந்து 7 கிலோமீட்டர் தொலைவில் வீடுகள் கட்டுவதற்கு கூட இதற்கு முன் அனுமதிக்கவில்லை என்பதாகவும், ஆனால் தற்போது சுமார் 3 கிலோமீட்டர் தொலைவில் தற்போது அமைய உள்ள கல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி அளிக்க கருத்துக் கேட்பு கூட்டம் நடைபெறுவதாகவும் கூறினார். மாதம் ஒரு முறை விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடைபெறுவதாகவும், திங்கள் கிழமை தோறும் குவாரி வரக்கூடாது என மனு அளிப்பதாகவும் தற்போது கருத்துக் கேட்பு கூட்டம் நடைபெறுவது குறித்து விவசாயிகளுக்கு வாட்ஸ்அப் மூலம் தகவல் தெரிவிக்கவில்லை எனவும் கூறினார். இருக்கன்துறை பகுதி 2 ஊராட்சியில் A1 அறிவிப்பு கூட அறிவிக்கவில்லை எனவும், இதுகுறித்து ஏற்கனவே சார் ஆட்சியரிடம் நிறைய மனு அளித்துள்ளதாகவும் தெரிவித்தார். ஏற்கெனவே கல் குவாரிகளுக்கு வழங்கப்பட்ட அனுமதியால் சங்கனேரி பகுதியில் தூசு அதிகமாக பரவுவதாகவும், வீடுகளிலும் தூசி படிந்துள்ளதாகவும் என தெரிவித்ததுடன் காவல்கிணறு விலக்கு பகுதியில் கனரக வாகனங்களால் மாசு ஏற்படுவது குறித்து எந்த நாளிதழ்களிலும் செய்தி வெளியிடவில்லை எனவும் கூறினார். கருத்துக் கேட்பு கூட்டமானது இருக்கன்துறை பகுதியில் மட்டுமே நடைபெற வேண்டும் என மனு அளித்திருந்தும், கூட்டத்தை வேறு இடத்தில் நடத்துவதாகவும் தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர் விழிஞ்சும் துறைமுகத்திற்கு இங்கிருந்து கற்கள் கடத்தி செல்லப்படுவதாகவும் அதனை எந்த வட்டாட்சியரும் தடுக்கவில்லை என்பதாகவும் இங்கிருந்து கற்களை லாரியில் எடுத்து சென்று அங்கிருந்து குப்பைகளை எடுத்து வந்து இங்கு கொட்டுவதாகவும் இதனை யாரும் கேள்வி கேட்பதில்லை எனவும் கூறி, புதிய குவாரிகளுக்கு அனுமதி அளிக்க கூடாது என விவசாயிகள் சார்பாக கேட்டுக்கொள்வதாக கூறினார்.

**திரு. சுப்பையாதாஸ், இராதாபுரம்:-**

திரு.சுப்பையாதாஸ் அவர்கள் பேசுகையில் தற்போது வீடு கட்டுவதற்கு M.Sand மற்றும் P.Sand தான் உபயோகிக்கிறார்கள் எனவும், அதற்கு தேவையான கற்கள் குவாரிகள் மூலமாகதான் நமக்கு கிடைக்கிறது எனவும், குவாரி அமைவதனால் ஊராட்சிகளுக்கு Mines fund மூலமாக வரும் பணத்தை ஊராட்சி வளர்ச்சிக்காக உபயோகப்படுத்துவதாகவும், குவாரி அமைவதனால் அப்பகுதியை சுற்றியுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வாய்ப்புள்ளதாகவும், குவாரிகளானது அரசு விதிமுறைகளை பின்பற்றி நடத்தினால் பாதிப்பு ஏற்படாது என்றும் குவாரி அமைவது நல்லதுஎனவும் கூறினார்.

**திருமதி. இராஜேஸ்வரி, இராதாபுரம்:-**

திருமதி.இராஜேஸ்வரி அவர்கள் பேசுகையில் முந்திய காலங்களில் மண் வீடு கட்டியதாகவும், தற்போது அறிவியல் உலகத்தில் இரண்டு மற்றும் மூன்று அடுக்கு மாடிகள் கொண்டு வீடு கட்டுவதாகவும், இப்பகுதி அருகில் குவாரிகள் உள்ளதால் வீடு கட்டுவதற்கு சுலபமாக உள்ளதாகவும், குவாரிகள் இப்பகுதியில் இல்லை என்றால் நாம் மதுரை அல்லது ஆந்திரா மாநிலங்களிருந்து கற்கள் வாங்கி வீடு கட்ட நம்மால் இயலாது எனவும் கூறினார்.

இராதாபுரம் தொகுதியானது வறட்சி பகுதி மற்றும் மழை பெய்வதில்லை எனவும், வானம் பார்த்த பூமியாக உள்ளது என்றும், அதனால் குவாரி வருவதனால் தான் நீர்வளம் கெடுவதாக கூறுவது முற்றிலும் தவறான கருத்து எனவும், இப்பகுதியில் கனிம வளம் அதிகமாக உள்ளதால் அதனை பயன்படுத்தி வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும், மேலும் இந்த குவாரி அமைவதற்கு ஆதரவு தெரிவிப்பதாகவும் கூறினார்.

**திரு. முகிலன், தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு சங்க ஒருங்கிணைப்பாளர், கரூர்:-**

திரு.முகிலன் அவர்கள் பேசுகையில் இந்த கருத்துக் கேட்பு கூட்டம் என்பது கல்குவாரி வேண்டுமா வேண்டாமா என்பதற்கான ஓட்டெடுப்பு அல்ல என கூறினார். திட்ட வடிவமைப்பாளர் திட்ட விளக்கமளிக்கையில் இந்த குவாரி இந்த பகுதியில் அமைந்தால் காற்று, நீர், நிலம், மண், ஒலி, பல்லுயிர் சூழல், சமூக பொருளாதார சூழல் அனைத்தும் பாதிக்கப்படும் அந்த பாதிப்பை எப்படி சரிசெய்வோம் எனக் கூறத் தொடங்கியதாகவும் ஆனால் எவ்வாறு சரிசெய்வோம் என கூறவில்லை எனவும் நிறைய பணம் ஊராட்சிக்கு வரும் என மட்டுமே கூறி விளக்கத்தை நிறைவு செய்ததாகவும் கூறினார். திட்டம் குறித்து 500 பக்க அறிக்கைகள் கொண்ட புத்தகத்தை தயாரித்துள்ளதாகவும், இந்த புத்தகத்தில் அவர்கள் குறிப்பிட்டுள்ளது பற்றி பேச வந்துள்ளதாக தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், கல்குவாரி அமைப்பது என்பது சிறு கனிம சலுகை விதிகள் சட்டம் 1959-ன் அடிப்படையிலானது. பிரிவு 36 செக்சன் 1/1A -ல் ஒரு கல்குவாரி அமைக்கும் போது 300 மீட்டர் சுற்றளவில் வீடுகள், அரசின் அங்கீகரிக்கப்பட்ட வீட்டு மனைகள் மற்றும் ஊர் நத்தம் ஆகியவை இருக்கக்கூடாது. தி/ள் A. அருண் முத்துக்குமார் அவர்கள் குவாரி அமைக்கக் இருக்கக்கூடிய புல எண்களில் ஒன்றான 293/3B-இல் இருந்து 160 மீட்டரில் வீடு இருப்பதாக FMB Sketch மூலமாக அறியவந்துள்ளது எனவும், வட்டாட்சியர் வழங்கிய அறிக்கையில் இது குறிப்பிடப்பட்டுள்ளது எனக்கூறினார். நில நிர்வாக ஆணையரிடம் தகவல் அறியும் உரிமைச் சட்டம் வழியாக பெற்ற ஆவணத்தில் UDR மற்றும் நத்த நில அளவீடு புல வரைபட பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள வீடு, சிதிலம் அடைந்து அல்லது இடிந்திருந்தாலும் அது ஆரம்ப நிலையில் எவ்வாறு குறிப்பிடப்பட்டியிருந்ததோ அவ்வாறே பதியப்படவேண்டும் என்றும் கல்குவாரி தொடர்பான தூர வரைபட அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட வீடு, வீட்டு மனை, ஓடை, பாதை ஆகியவற்றை கிராம வரைபடம், புல வரைபடம் மற்றும் 'அ' பதிவேடு ஆகியவற்றை சரிபார்த்து வழங்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கு வீடு உள்ளதா இல்லையா என்று தெரியாது. ஆனால் அரசினுடைய ஆவணத்தில் வீடு உள்ளது. வீடு இடிந்திருந்தாலும் நில வகைப்பாட்டை பொறுத்தவரை அது வீட்டு மனையாக கருதப்படும். 155 மீட்டரில் வீடோ வீட்டுமனையோ இருப்பதால் உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த குவாரிக்கு அனுமதி கொடுக்க முடியாது, என்றும் இதுபோன்ற கல் குவாரிக்கு அனுமதி கொடுத்ததால் ஏற்கெனவே லெட்சுமிபுரத்தில் தான் வழக்கு பதிவு செய்து 2 கல் குவாரிகள் மூடப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

தொடர்ந்து கூறிய அவர் இந்த குவாரி திட்ட அறிக்கையில் 50 மீட்டர் சுற்றளவில் எந்த நீர்நிலைகளும் இல்லை எனவும் 300 மீட்டருக்குள் வீடோ

குடியிருக்கும் பகுதியோ இல்லை எனவும், 50 மீட்டர் சுற்றளவிற்குள் அரசு புறம்போக்கு நீர் நிலையோ மற்றும் இடுகாடு ஏதும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், ஆனால் புல எண் 291 –ல் புல வரைபடத்தில் மேற்கு பகுதியில் வெறும் 20 மீட்டர் தூரத்தில் ஓடை ஓடுகிறது. 292/1C2 என்ற புல எண்ணின் 20 மீட்டர் தூரத்தில் உள்ள 292/2, 292/1 B ஆகிய இரு புல எண்களும் ஓடை என அரசு ஆவணத்தில் உள்ளது மற்றும் 293/3B–ன் வட புறத்தில் பொதுப்பணித்துறை கால்வாய் அமைந்துள்ளதாகவும் தெரிவித்தார். "அ" பதிவேட்டில் புல எண் 291–ல் பொதுப்பணித்துறை கால்வாய் ஒன்று ஓடுவதாக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாகவும் 292 மற்றும் 293 ஆகிய புல எண்களின் கால்வாய் ஓடுவதாகவும் அந்த குறிப்பு உள்ள பக்கத்தை மறைத்து அச்சிட்டு ஆவண மோசடி செய்ததாகவும் "அ" பதிவேட்டில் உள்ளதை மறைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இவர் பேசிக்கொண்டிருக்கும் போது கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. சலசலப்பிற்கு பின் பேசிய அவர் கனிம விதிகளின்படி காற்றாலையிலிருந்து 150 மீட்டர் தூரத்தில் கல் குவாரி அமைக்கக் கூடாது என குறிப்பிட்டுள்ளதாகவும், Indian Electricity Rule, 1956 பிரிவு 83/2–ல் 300 மீட்டர் தூரத்தில் வெடி நிகழ்வுகள் இருக்கக் கூடாது என கூறியுள்ளதாகவும் தெரிவித்தார். ஆனால் கூகுள் வரைபடத்தை நோக்கும் போது குவாரி அமைய உள்ள புலத்தை சுற்றி 4 காற்றாலைகள் அமைந்துள்ளதாகவும், மேற்கு பகுதியில் 107 மீட்டர் தொலைவிலும், தென்மேற்கு பகுதியில் 139 மீட்டர் தொலைவிலும், கிழக்கு பகுதியில் 98 மீட்டர் தொலைவிலும் தெற்கு பகுதியில் 126 மீட்டர் தொலைவிலும் காற்றாலைகள் இருப்பதாக கூறினார். மேலும் கூறுகையில் குவாரியை சுற்றி 500 மீட்டர் சுற்றளவில் நீர்நிலைகள் இருக்கக்கூடாது, ஆனால் புல எண் 300–ல் 410 மீட்டரில் நீர்நிலை உள்ளதால் இந்த குவாரிக்கு அனுமதி வழங்கக்கூடாது என குறிப்பிட்டு பேசினார். ToR அனுமதிக்கும் முன்னரே இங்கு ஆய்வு செய்துள்ளதாகவும் கிராம நிர்வாக அலுவலர் பொய் சான்று அளித்துள்ளதாகவும் குவாரி புலத்தை சுற்றி பாதுகாக்கப்பட்ட அனு உலை உள்ளதாகவும் கூறினார்.

இவ்வாறு இவர் பேசிக்கொண்டிருக்கும் போது, இவர் அதிக நேரம் பேசிக் கொண்டிருப்பதால் மற்றவர்களுக்கு வாய்ப்பு அளிக்குமாறு கூட்டத்தில் மற்ற பொதுமக்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால், சார் ஆட்சியர் ஆவணங்களை அளிக்குமாறு தெரிவித்தார். பின், அனைவரும் பேசிய பின் இறுதியாக பேசுமாறு சார் ஆட்சியர் அறிவுறுத்தியதை தொடர்ந்து மற்ற பொதுமக்கள் தங்கள் கருத்தை பதிவு செய்தனர்.

<u>திரு. நடராஜன், சங்கநேரி:–</u>

திரு.நடராஜன் அவர்கள் பேசுகையில் கல் குவாரி தொடங்குவதால் தண்ணீர் மட்டம் மிகவும் கீழே செல்கிறது என்ற கருத்தை தான் மறுப்பதாகவும், கல் குவாரிக்கு மிக அருகில் தனது தோட்டம் இருப்பதாகவும் அதற்கு எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லை என்று கூறினார். அவர் பேசுகையில் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

அதனை தொடர்ந்து பேசிய அவர் கல் குவாரி தொடங்குவதால் மக்களுக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்கும் எனவே அமையவுள்ள குவாரிக்கு அனுமதி அளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

<u>திரு. ஐயப்பன், சங்கநேரி:–</u>

திரு.ஐயப்பன் அவர்கள் பேசுகையில் தான் இருக்கன்துறை பகுதி –II கிராமத்தை சேர்ந்தவர் என்றும், தனக்கு 43 வயதாகிறது எனவும், தான் பிறந்து வளர்ந்த நாள் முதல் இங்கு வாழ்வதாகவும் இந்த குவாரி அமையவுள்ள இடத்தில் வீடுகள் ஏதும் இல்லை எனவும், காற்றாலைகள் மட்டுமே தற்போது அமைக்கப்பட்டுள்ளதாகவும் ஏற்கனவே குவாரி திட்டம் முடிவுற்ற கல் குவாரி

குழிகளில் இருந்து இரண்டு ஊராட்சிகளுக்கு தண்ணீர் சென்று கொண்டிருப்பதாகவும். கல்குவாரிகளால் பாதிப்பு ஏற்படுமாயின் குவாரிக்கு எதிர்ப்பு தெரிவிப்பேன் என்றும் கல் குவாரி அமைவதற்கு முன் வெளியிட்ட A1 அறிக்கையை தான் பார்வையிட்டதாகவும் இந்த இடத்தில் குவாரி அமைவது பாதுகாப்பானதாக இருக்கும் என்பதாக வருவாய் துறை மற்றும் கிராம நிர்வாக அலுவலரிம் மனு அளித்ததாகவும் அதற்கான மனு நகலை தேவைப்பட்டால் சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், அவர் பேசுகையில் இருக்கன்துறை மக்களுக்கு ஏற்கனவே அமைந்துள்ள குவாரிகளில் இருந்து கனிம பொருட்களில் பாதிவிலையில் அளித்து வருவதாகவும் கூறினார். மேலும், மூன்று குவாரிகளில் இருந்து ஊராட்சிக்கு தேவையான தண்ணீர் அளிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் பாதுகாப்பு விதிமுறைகளை கடைப்பிடித்து குவாரியை இயக்குமாறு கூறி தனது ஆதரவை தெரிவித்தார்.

<u>திரு. V. சாண்டல் முத்துராஜ், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் மற்றும் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், கூடன்குளம் :-</u>

திரு.V.சாண்டல் முத்துராஜ் அவர்கள் பேசுகையில் இருக்கன்துறை பகுதியில் கல் குவாரிகள் அதிகமாக இருப்பதாக கூறியதாகவும், ஆனால் தற்போது 15 கல்குவாரிகள் மட்டுமே இயக்கத்தில் உள்ளதாகவும். இந்த பகுதியில் அணுமின் நிலையங்கள் மற்றும் ISRO உள்ளதாகவும், பல்வேறு கட்டுமான பணிகளுக்கு மூலப்பொருளான கருங்கல் இந்த பகுதியில் காணப்படுவதாகவும் அதனால் தான் இந்த பகுதியில் குவாரிகள் அமைந்துள்ளதாகவும்ஒரு குவாரியில் விபத்து ஏற்படுவதால் அனைத்து குவாரிகளிலும் விபத்து ஏற்படுவதில்லை என்பதாகவும் பாதுகாப்பு முறைகளை உறுதிபடுத்தி குவாரிக்கு அனுமதி அளிக்குமாறு கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், மனிதன் உயிர் வாழ்வதற்கு நிலம், நீர், காற்று, உணவு, உடை ஆகிய ஐந்தும் தேவை எனவும், இந்த நிலத்தில் இருந்து எடுக்கும் கனிம வளங்களை பயன்படுத்திதான் காங்கிரீட் கூரைகள் அமைக்கப்படுவதாகவும், கனிம வளங்கள் இல்லை என்றால் வளர்ச்சி திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாது எனவும், சாலைகள் அமைப்பதற்கும் கனிம வளங்கள் தேவை எனவும், கல்குவாரி அனைவருக்கும் தேவையான ஒன்று, அதன் முக்கியத்துவத்தை நாம் உணர வேண்டும் எனவும், கடற்கரையில் பகுதிகளான இடிந்தக்கரை மற்றும் கூத்தங்குழி ஆகிய இடங்களில் உள்ளவர்கள் இந்த கருத்துக்கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளதாகவும் கடற்கரை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தூண்டில் வளைவுகள் இந்த கருங்கற்களால் அமைக்கப்பட்டுள்ளதாகவும், கருங்கற்களால்தான் மண் அரிப்பு தடுக்கப்படுகிறது எனவும் தெரிவித்தார். கன்னியாகுமரி கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள வள்ளுவரின் சிலையும், கருங்கல்லில் செதுக்கப்பட்டதுதான் எனவும், எனவே குவாரிகளானது நாட்டுக்கும் வீட்டுக்கும் மக்களுக்கும் தேவை என்று தன் ஆதரவை தெரிவித்தார்.

<u>திரு. ராஜப்பூ, செயலாளர்– இராதாபுரம் வட்டார விவசாய நலச்சங்கம் மற்றும் தமிழ்நாடு விவசாய பாதுகாப்பு சங்கம் ஒன்றிய செயலாளர் :-</u>

திரு.ராஜப்பூ அவர்கள் பேசுகையில், இருக்கன்துறை பகுதியானது 80% விவசாயிகள் மிகுந்த பகுதி எனவும், மண் மற்றும் கற்கள் எல்லாருக்கும் தேவை தான் ஆனால், விவசாயம் பாதிக்கப்படாமல் கல் மற்றும் மண் எடுக்கக்கூடிய இடங்கள் நிறைய இருப்பதாகவும் கூறினார். இருக்கன்துறை ஊராட்சி கிராம சபை கூட்டத்தில் இருக்கன்துறை பகுதியில் கல்குவாரிகள் வேண்டாம் என்று மக்களால் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும், கிராம சபை கூட்டத்தில் கிராம மக்களால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு மேலான சட்ட உள்ளதா எனவும், தற்போது அமையவுள்ள குவாரியில் 47 மீ ஆழம் வரை கற்கள் வெட்டி எடுக்கப்போவதாக கூறினார்கள் எனவும், 47 மீ என்பது 154 அடி ஆழமாகும் அந்த ஆழத்திற்கு

கிணறுகள் உள்ளனவா எனவும் கேள்வி எழுப்பினார். இருக்கன்துறை பகுதியில் விவசாயத்தில் அதிக மக்கள் ஈடுபடுவதாகவும் ஆனால் விவசாயிகளின் கருத்தை புறம்தள்ளுவதாகவும் கூறினார். இருக்கன்துறை பகுதி மக்களின் கோரிக்கை ஏற்று குவாரிகளுக்கு அனுமதி வழங்ககூடாது எனவும், ஏற்கெனவே தான் கல்குவாரி தொடர்பான மூன்று, நான்கு கருத்துக்கேட்பு கூட்டத்தில் கலந்துகொண்டதாகவும் ஆனால் மக்களுடைய கருத்து சரியாக பதிவு செய்யப்படுவதில்லை எனவும், குவாரி நிறுவனங்கள் சட்ட திட்டத்தின் படி நடப்பதில்லை எனவும், கல் குவாரிக்கு அனுமதி வழங்ககூடாது எனவும், வழங்கினால் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றார்.

**திரு.அர்ஜுனன் , 6வது வார்டு உறுப்பினர்,இருக்கன்துறை :-**

திரு.அர்ச்சுனன் அவர்கள் பேசுகையில் இதற்குமுன் ஒரு கருத்துக்கேட்பு கூட்டமானது செட்டிகுளத்தில் நடந்தபோது, குவாரி அமையவுள்ள பகுதியில் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்த வேண்டும் என மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்ததாகவும் அதற்கு சம்பந்தப்பட்ட ஊராட்சியில் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்த முயற்சி செய்வதாக பதில் அளிக்கப்பட்டதாகவும், தனக்கு முன்தினம் தான் இந்த கருத்துக்கேட்பு கூட்டம் நடக்க இருப்பது தெரிய வந்ததாகவும், கிராம நிர்வாக அலுவலர் உள்ளிட்ட இப்பகுதியிலுள்ள மக்களுக்கும் கருத்துக்கேட்பு கூட்டம் குறித்து சரியான தகவல் இல்லை எனவும், துண்டு பிரசுரங்கள் கொடுத்ததாக கூறினார்கள் ஆனால் சங்கநேரி பகுதியில் துண்டு பிரசுரங்கள் கொடுக்கப்பட்டதா எனவும், முறையாக தகவல் இல்லாமல் இந்த கருத்துக்கேட்பு கூட்டத்தை நடத்துவதாகவும், தங்களது ஊராட்சியில் தான் மக்கள் பாதிக்கப்படுவதாகவும், மேலும், திட்ட விளக்கத்தில் சுற்றுச்சூழலை பாதுகாக்க கல்குவாரி உரிமையாளர் மரம் நடுவதாக கூறியதாகவும் ஆனால் எந்த கல் குவாரிகளிலாவது மரம் நட்டார்களா எனக் கேள்வி எழுப்பினார்.

மேலும், அவர் கூறுகையில் கிரஷர்கள் மற்றும் குவாரிகளில் இருந்து வரும் தூசியினால் சாலைகளில் அதிகம் மாசு ஏற்படுவதாகவும் அதனால் இரு சக்கர வாகனங்களில் கூட செல்ல இயலுவதில்லை எனவும், தூசு அருகிலுள்ள விவசாய நிலத்தில் படிந்து விவசாயம் கூட செய்ய இயலவில்லை எனவும், இருக்கன்துறை பகுதியில் இனி எந்த கல் குவாரிகளுக்கும் அனுமதி வழங்கக்கூடாது எனவும், 29.03.2025- உலக தண்ணீர் தினம் அன்று இருக்கன்துறை ஊராட்சியின் கிராம சபை கூட்டத்தில் கல் குவாரி வேண்டாம் என தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அதை நிறைவேற்ற வேண்டும் எனவும், இருக்கன்துறை பகுதியில் கல் குவாரிகளுக்கு அனுமதிகள் வழங்க கூடாது எனவும் தனது கருத்தை தெரிவித்தார்.

**திரு.முகமது பயாஸ், குழு செயலாளர் – மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இராதாபுரம் வட்டம்:-**

திரு.முகமது பயாஸ், அவர்கள் பேசுகையில் கல் குவாரிகள் அமைக்ககூடாது என்பது தான் தனது கருத்து என்றும் ஏற்கனவே 30–க்கு மேற்பட்ட குவாரிகள் இராதாபுரம் தாலுகாவில் செயல்படுவதாகவும், குறிப்பிட்ட சில உரிமையாளர்கள் வாழ்வதற்காக ஒரு கிராமத்தையே சூறையாடுவது ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், இந்த குவாரி அமைவதால் இருக்கன்துறை ஊராட்சியில் நீர் இல்லா சூழலை உருவாக்கிவிடும் என்ற அச்சம் ஏற்படுவதாகவும் இந்த கல் குவாரியில் 4 வாகனம் உபயோகபடுத்தப்படும் எனவும் 3 துளையிடும் இயந்திரம் பயன்படுத்தபடும் என திட்ட விளக்கத்தில் கூறியதாகவும், ஆனால் சுங்கச்சாவடியில் பார்த்தால் சாரை சாரையாக ஆயிரத்திற்கு மேற்பட்ட வாகனங்களை காணலாம் எனவும், இங்குள்ள கல்குவாரிகளில் இருந்து எடுக்கப்படும் கற்கள் அனைத்தும் அருகில் உள்ள கேரளா மாநிலத்திற்கு கடத்தப்படுவதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர் வானம் பார்த்த பூமியாக உள்ள இராதாபுரம் வட்டத்தில் மழை பெய்தால் தான் நீர் என்ற நிலையுள்ளது எனவும், அருகிலுள்ள பேச்சிபாறை மற்றும் பெருஞ்சாணி அணையிலிருந்து தண்ணீர் முழுமையாக வருவதில்லை

எனவும், நிலத்தின் வழியாக தண்ணீர் கொண்டு வருவதால் கல் குவாரிகளுக்கு பாதிப்பு ஏற்படும் என்ற காரணத்தினால் தண்ணீரை முறையாக கொண்டு வருவதில்லை எனவும், குடிப்பதற்கும் குளிப்பதற்கும் கூட தண்ணீர் இல்லாத நிலையை இந்த கல் குவாரி உருவாக்கிவிடும் என்பதாகவும், குவாரிகளில் அதிக விபத்து ஏற்படுவதாகவும், ஆனால் அவை மூடி மறைக்கப்படுவதாகவும், கனரக வாகனத்தில் இருந்து வரும் தூசியினால் இரு சக்கர வாகனத்தில் பயணிக்க முடிவதில்லை எனவும், சங்கநேரி விலக்கு பகுதியில் காற்றின் வேகம் அதிகரித்தால் கருவாடுகளின் துர்நாற்றம் மற்றும் கனரக வாகனத்தில் இருந்து வெளியேறும் தூசியினால் அப்பகுதி மக்கள் வாழ தகுதியில்லாத இடமாக மாறிவிடும் எனவும் கூறினார்.

மேலும், திட்ட விளக்கம் அளித்த சுற்றுச்சூழல் ஆலோசகர் திட்ட விளக்கத்தை விரைவாக கூறியதாகவும், இந்த கல் குவாரி வருகையினால் மக்கள் வாழவழியின்றி வேறு இடத்திற்கு செல்லும் சூழல் ஏற்படும் என்றும் எனவே, இந்த கல் குவாரி அனுமதி வழங்கக்கூடாது எனவும் தனது கருத்தை கூறினார்.

**<u>திரு.ஆதி பரமேஷ்வரன், முன்னாள் வள்ளியூர் துணைத்தலைவர் :-</u>**

திரு.ஆதி பரமேஷ்வரன் அவர்கள் பேசுகையில், இருக்கன்துறை கிராமத்தில் தான் குவாரிகள் அமைத்து கல் எடுக்க வேண்டுமா என கேள்வி கேட்டால், கனிம வளங்கள் எங்கு இருக்கிறதோ அங்கு தான் எடுக்கமுடியும் எனவும், முன்னோர்கள் 10 x 10 என்ற அளவில் வீடு கட்டியவதாகவும், தற்போது 2000 முதல் 3000 சதுர அடிகளில் வீடு கட்டிவாழ்வதாகவும் மேலை நாடுகளை போல மரம் மற்றும் ஸ்டீல் பொருட்களை கொண்டு வீடு கட்டும் தொழில்நுட்பம் நமது நாட்டில் இல்லை எனவும், ஆற்று மண்ணிற்கு மாற்றாக M.Sand தற்போது உபயோகப்படுத்தப்படுவதாகவும், ஜல்லி, கற்கள் இல்லாமல் கட்டுமானத்திற்கு மாற்றுப்பொருட்கள் உள்ளதா எனவும் கேள்வி எழுப்பிய அவர், M.Sand, ஜல்லி, கற்கள் இல்லாமல் வீடுகள், அரசு அலுவலகங்கள், தார் சாலைகள், பாலங்கள் எதுவும் கட்ட முடியாது எனவும், நம் நாட்டிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் இந்த கல்குவாரிகளில் உள்ளது எனவும், இந்த கல்குவாரிகளில் பாதுகாப்பினை உறுதி செய்த பின் இந்த கல் குவாரிக்கு அனுமதி வழங்க வேண்டும் எனவும், இந்த கல் குவாரி அமைவதற்கு ஆட்சேபனை எதுவும் இல்லை எனவும் தனது கருத்தினை தெரிவித்தார்.

**<u>திரு.கிறிஸ்டோபர், சுற்று சூழல் பாசறை, திருநெல்வேலி மண்டல செயலாளர், நாம் தமிழர் கட்சி :-</u>**

திரு.கிறிஸ்டோபர், அவர்கள் பேசுகையில் நாம் வாழும் பூமி நமக்கானது மட்டுமல்ல எதிர்கால தலைமுறைக்கும் சொந்தமானது. நமது தலைமுறையினர் வீடு கட்டுவதற்கு கல் மற்றும் மண் அவசியம், நமது வளங்கள் அனைத்தையும் சுரண்டி கேரளா மாநிலத்திற்கு அனுப்பிவிட்டு அங்குள்ள கழிவுகளை மட்டும் நாம் வாங்கி நமது இயற்கை வளங்களை காலி செய்துக் கொண்டிருப்பதாகவும், நமது அடுத்த தலைமுறைகள் வீடு கட்டுவதற்கு கல் மற்றும் மண் எப்படி கிடைக்கும் என கேள்வி எழுப்பினார். கேரளாவில் இருந்து நம்மால் கனிம வளங்களை வாங்க இயலாது என்று கூறினார். மேலும், இந்த கல்குவாரி அமைவதற்கு தான் எதிர்ப்பு தெரிவிப்பதாக கூறி தன் கருத்தை தெரிவித்துள்ளார்.

**<u>திரு.கணேசன், நாம் தமிழர் கட்சி, கூடன்குளம்:-</u>**

திரு.கணேசன் அவர்கள் பேசுகையில் எல்லோரும் வீடு கட்டி சிறப்பாக வாழ வேண்டும் என்று கூறியதாகவும், ஆனால் வீடு கட்டி வீட்டு மண்ணை சாப்பிட முடியாது. உணவிற்கு விவசாயம் செய்ய வேண்டும், விவசாயத்திற்கு தண்ணீர் மற்றும் நிலம் தேவைப்படுகிறது என்று கூறினார். மேலும், கிணறுகள் 90 அடிகள் தோண்டினாலும் 1000 அடிக்கு ஆழ்துளை கிணறுகள் அமைத்தாலும் தண்ணீர்

இருப்பதில்லை ஏனென்றால் கல்குவாரியினை 500 அடிக்கு மேல் தோண்டுகின்றனர். கல் குவாரிகளில் அளவிற்கு அதிகமாக ஆழம் தோண்டப்பட்டுள்ளதால் எந்த ஒரு தோட்டங்களிலும் தண்ணீர் கிடைப்பதில்லை எனவும், கூடன்குளம் பகுதிக்கு கல் குவாரிகளிலிருந்து தான் தண்ணீர் வருகிறது. குவாரிகளில் இருந்து தண்ணீர் அளிக்கிறார்கள் என்றால் எத்தனை அடி ஆழத்திற்கு தோண்டியிருப்பார்கள் எனவும் கேள்வி எழுப்பினார்.

மேலும், எம்.எல்.ஏ–க்கள் எல்லாம் தண்ணீர் கொண்டு வருவதற்கு காட்டும் முனைப்பை விட குவாரிகளுக்கு அதிகம் முனைப்பு காட்டுவதாக கூறினார். தண்ணீர் தன்னிறைவு பெற்றால் குவாரிகள் வருவதற்கு அனுமதி அளிக்கலாம் எனவும், இராதாபுரம் தொகுதியில் தண்ணீர் இல்லை. தண்ணீர் அனைத்தும் உப்பு தண்ணீராக உள்ளதாகவும், அதனை சுத்திகரித்து குடிப்பதாகவும், கல் குவாரிகள் 1000 அடிகள் கீழ் உள்ளதாகவும் கிணறுகள் 100 அடிகள் உள்ளதாகவும், இதனால் விவசாயம் செய்ய தண்ணீர் கிடைப்பதில்லை என்றும், விவசாயிகள் பற்றி கவலைபட யாரும் இல்லை என்றும், விவசாயம் இருந்தால்தான் நாம் வாழ முடியும் எனவும் அமையவுள்ள கல் குவாரிக்கு அனுமதி வழங்க கூடாது எனவும் தனது கருத்தை தெரிவித்தார்.

<u>திரு.ஜெயசீலன், கூத்தங்குழி:-</u>

திரு.ஜெயசீலன் அவர்கள் பேசுகையில் தூண்டில் வளைவுகள் அமைப்பதற்கு குவாரிகள் மூலம் கல் கிடைக்கிறது என்கிறார்கள், ஆனால் 10, 15 ஆண்டுகளுக்கு முன் எந்த கடற்கரையிலும் தடுப்பணை தேவைப்படவில்லை எனவும், அப்போது கல் குவாரிகள் நிறைய இல்லை எனவும், ஆனால் கல் குவாரிகளில் கல் தோண்ட ஆரம்பித்த பின் தான் கடல் நீர் உள்வாங்கி கடற்கரை அருகிலுள்ள தென்னந்தோப்புகள் அழிந்து விட்டதாகவும், கடல் நீர் மட்டம் உயர்ந்து உப்பு நீராக மாறிவிட்டதாகவும், கடல் அரிப்பு ஏற்படுவதாகவும் தெரிவித்தார்.

கல் குவாரியினால் இடிந்தகரையில், அணு உலை அருகிலுள்ள வீடுகளில் விரிசல் ஏற்பட்டதை மக்கள் பூகம்பம் ஏற்பட்டதாக நினைத்து ஓடியதாகவும், தற்போது அமையவுள்ள கல் குவாரியினால் அணு உலையில் விரிசல் ஏற்படலாம் எனவும், கடந்த சுதந்திர தினத்தன்று கிராம சபை கூட்டத்தில் கல் குவாரி வேண்டாம் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும், ஆனால் தற்போது கல் குவாரி வேண்டும் என பல ஆவணங்களை தங்களிடம் சமர்ப்பிப்பார்கள், இதில் எது உண்மை என்று அறிந்து செயல்பட வேண்டும் எனவும், அரசியல்வாதிகள் ஐந்து ஆண்டிற்கு ஒரு முறை மாறுவார்கள் ஆனால் அரசு அதிகாரிகள் தான் தாயுள்ளம் கொண்டு எங்களை பார்க்கவேண்டும் எனவும், இருக்கன்துறை ஊராட்சியில் மக்கள் வாழ்வதற்கு வழிவகை செய்ய வேண்டும் எனவும், கல் குவாரிகள் அமைக்க அனுமதி அளிக்க வேண்டாம் என்றும் தனது கருத்தை தெரிவித்தார்.

<u>திரு. முகிலன், தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு சங்க ஒருங்கிணைப்பாளர், கரூர்:</u>

திரு.முகிலன், இறுதியாக மீண்டும் பேசியவர், தமிழ்நாடு முதலமைச்சர் முன்னர் எதிர்கட்சி தலைவராக இருந்தபோது நவம்பர் 22, 2014 –ல் தங்களது கருத்தை கேட்டு செயற்கை மணலிற்கும் ஆற்று மணலிற்கும் மாற்றாக வெளிநாட்டில் இருந்து இயற்கை ஆற்று மணலை இறக்குமதி செய்ய வேண்டும் என அவரது முகநூலில் ஆங்கிலத்திலும் தமிழிலும் பதிவு செய்துள்ளதாகவும், வெளிநாட்டு இயற்கை ஆற்று மணலை இறக்குமதி செய்ய மூத்த பொறியாளர் சங்கமும் வலியுறுத்துகிறது. இதை அரசு கொள்கையில் ரீதியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என கேட்டுகொண்டார்.

மேலும், அவர், ஏக்கருக்கு 200 பசுமை மரம் நடுவதாக குறிப்பிட்டுள்ளதாகவும், இக்குவாரியானது 2400 மரக்கன்றுகளை நடுவதாகவும் திட்ட விளத்தில் குறிப்பிட்டுள்ளதாகவும், குவாரி பகுதியை சுற்றியுள்ள 30 குவாரிகளும் பசுமை மரங்களை நட்டிருந்தால் 3 லட்ச மரங்கள் இருந்திருக்கும் எனவும், பசுமையான

இடத்தை அமைக்காத காரணத்தினால் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் வினித் அவர்கள் 2023 –ல் கோரங்கிபாளையம் இராமகிருஷ்ணா கல்குவாரியின் அனுமதியை இரத்து செய்ததாக கூறினார். திட்ட விளக்கத்தில் இப்பகுதி மிக குறைந்த வாய்ப்புள்ள நில அதிர்வு மண்டலம்பகுதி –II என்று கூறியதாகவும், ஆகவே எப்போது வேண்டுமானாலும் நில அதிர்வு ஏற்பட வாய்ப்புள்ளதாகவும், ஆயன்குளம் பகுதியில் அதிசய கிணறு ஏற்கனவே ஏற்பட்டுள்ளதாகவும், ஏற்கனவே 3.2 ரிக்டர் நில அதிர்வு ஏற்பட்ட பகுதி எனவும், அதனால் அணு உலைகளுக்கு ஆபத்து என்றும் குவாரிகளில் அதிகமாக வெட்டி எடுத்ததற்காக அபராதம் விதித்ததாகவும், அந்த அபராதம் விதித்த குவாரிகளுக்கு அதிக படியான வெடி மருந்துகள் சட்ட விரோதமாக எவ்வாறு கொண்டுவந்தார்கள் என கண்டறிந்து அவர்கள் மீது வெடி மருந்து சட்ட விதிப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார். கிராம நிர்வாக அதிகாரி அவர்கள் பொய்யான சான்று அளித்ததால் அவர் மீதும் BNS சட்டப்படி நடவடிக்கை எடுக்கவும் கேட்டுக்கொண்டார். எல்லா தொழிலாளிகளுக்கும் ESI, PF, Insurance ஆகியவை நடைமுறைபடுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். பொதிகை மலையில் நிலச்சரிவு ஏற்படகூடிய அபாயம் உள்ளதாக ISRO நிறுவனம் ஆய்வு செய்த அறிக்கையில் உள்ளதாகவும் எனவே இந்த குவாரிக்கு அனுமதி அளிக்க கூடாது என தனது கருத்தை பதிவு செய்தார்.

அதை தொடர்ந்து, எழுத்து பூர்வமான மனுக்கள் இருந்தால் அளிக்கலாம் என மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருநெல்வேலி கூறியதை தொடர்ந்து 208 மனுக்கள் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் அளிக்கப்பட்டது.

இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருநெல்வேலி அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

அத்துடன் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நிறைவு பெற்றது.

| | |
|---|---|
| மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருநெல்வேலி | சார் ஆட்சியர்,<br>சேரன்மாகதேவி |

<u>இணைப்புகள்:</u>

1. வருகைப்பதிவேடுநகல் (மொத்தம் – 20 பக்கங்கள், 213 நபர்கள்).
2. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் வீடியோ (ஒலிமற்றும்ஒளி) பதிவு.
3. பத்திரிக்கைச் செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
4. கருத்து கேட்பு கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து எழுத்துப்பூர்வமாக பெறப்பட்ட மனுக்கள் – 208 எண்ணம்.